சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.02/2025

18.03.2026

வா.சா.1 திருமதி.ரோஜாபீவி, க/பெ. சுகுபுதீன்

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஆரம்பத்தில் ஷேக்தாவுதுக்கு சொந்தமானது என்றால் சரிதான். ஷேக்தாவுதுக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அவர்களின் பெயர் அப்துல் ஜெயில், முகம்மது மிஸ்கின் என்றால் சரிதான். முகம்மதிய வழக்கப்படி சொத்துக்கள் இரண்டு மகன்களுக்கும் சரிசமமாக உரிமையுள்ளது என்றால் சரிதான். ஷேக்தாவுதின் மகன்கள் இருவருக்கும் இடையே பாகபிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் ஹிபா பெற்றதாக சொல்லியுள்ளது சம்பந்தமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முந்தைய வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். ஹிபா கொடுக்கும் போது அன்றைய தினமே சொத்து ஒப்படைக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். ஷேக்தாவுதின் இரண்டு மகன்களிடமிருந்தும் நான் ஹிபா வாங்கவில்லை என்றால் சரிதான். முகம்மது மிஸ்கின் இறந்த பின்னிட்டு மற்றொரு மகனிடமிருந்து ஹிபா வாங்கினேன். முகம்மது மிஸ்கினுக்கு 3 பெண்குழந்தைகள் மற்றும் அவரின் மனைவி மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். அவர்கள் அனைவரும் சவுதி அரேபியாவில் இருக்கும் போதே இறந்துவிட்டார்கள். முகம்மது மிஸ்கினும் அவரது வாரிசுகளும் சவுதி அரேபியாவில் இறந்துவிட்டதை காட்ட ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஹிபா பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஹிபா பெறுவதற்கு முன்பு 1 ஆம் பிரதிவாதியும் அவரின் முன்னோர்களும் தாவா சொத்தை சாகுபடி செய்துவந்தார்கள் என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக உத்திராபதி மீது அ.வ.எண்.17/2016 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வரை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றாலும் தீர்ப்பில் 1 முதல் 5 பிரதிவாதிகள் சொத்தை அனுபவம் செய்துவருவதாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து உத்திராபதி மேல்முறையீட்டு எண்.13/2018 மேல்முறையீடு செய்ததில் மேல்முறையீடும் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அதனை எதிர்த்து தான் வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி நான் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். 1978 லிருந்து 1 முதல் 5 பிரதிவாதிகளின் முன்னோர் தாவா சொத்தை சாகுபடி செய்துவருகிறார்கள் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும்

பிரதிவாதிகள் தான் தாவா சொத்தை சாகுபடி செய்துவருகிறார்கள் என்றாலும் சரியல்ல. ஹிபாவின் அடிப்படையில் தாவா சொத்து என் அனுபவத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். தாவா சொத்தை நான் விவசாயம் செய்யவில்லை என்று அ.வ.எண்.17/16 வழக்கு தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அப்துல்ஜெலில் மட்டும் ஹிபா கொடுத்துள்ளதாலும் அந்த ஹிபா பதிவு செய்யாததாலும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஹிபாவின் அடிப்படையில்தான் தாவா சொத்தை பொறுத்து உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். பதிவு சட்டம் பிரிவு 17 ன் படி ஹிபா கட்டாயமாக பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பதிவு செய்யாத ஹிபாவின் அடிப்படையில் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. ஹிபா கொடுத்த காலத்தில் தாவா சொத்தில் அப்துல் ஜெலில் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சென்னைக்கு சென்றுதான் ஹிபா எழுதிவாங்கினேன். ஹிபாவில் முகம்மது ஹனப்பி, ஜெகபர்தீன் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். சாட்சிகள் அத்திக்கடையில் வசித்து வருகிறார்கள். சாட்சிகளை நான்தான் சென்னைக்கு அழைத்து சென்றேனா என்றால் ஆமாம். ஹிபா நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்குண்டான மூல ஆவணங்கள் அப்துல்ஜெலில் வசம் உள்ளது. மூல ஆவணங்கள் என்னிடம் ஒப்படைக்கவில்லையா என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். மூல ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றாலும் உண்மையில் இருந்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாவா சொத்தை 16.02.2024 அன்று சிங்காரவேல் என்பவருக்கு கிரயம் செய்துக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சிங்காரவேலுக்கு கிரயம் செய்வதற்கு முன்பு தாவா சொத்தை எனது கணவருகக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி தான் வா.சா.ஆ.3 ஆவணத்தை எனது கணவர் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாமல் எனது கணவர் கிரயம் செய்துக்கொடுத்துள்ளார். கிரயத்திற்கு பின்னிட்டு பிரதிவாதிகளுக்கும் சிங்காரவேலுக்கும் இடையே சொத்தை அனுபவிப்பதில் பிரச்னை ஏற்பட்டு கொராடாச்சேரி காவல்நிலையத்தில் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். விசாரணைக்கு பின்னிட்டு சிங்காரவேல் பெயரிலிருந்து என் பெயருக்கு வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சிங்காரவேல் அனுபவத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. சிங்காரவேல் சொத்தை சாகுபடி செய்ததற்காக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு வாரத்தில் நான் கிரயம் பெற்றதால் அவர் பெயரில் ஆவணம் ஏற்படவில்லை. தாவா சொத்தை நான் சாகுபடி செய்து வருவதாக

சொல்வதற்கு அடங்கல் கணக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் தாவா சொத்தை எந்தக்காலத்திலும் சாகுபடி செய்ததில்லை என்றாலும் பிரதிவாதிகள் தான் சாகுபடி செய்துவருகிறார்கள் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் உத்திராபதிக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் குத்தகை சாகுபடி உள்ளது என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

6, 7 பிரதிவாதிகளை எதற்காக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அவர்கள்தான் என்னை மிரட்டுகிறார்கள். அதனால் வழக்கில் சேர்த்துள்ளேன். 6, 7 பிரதிவாதிகள் மீது நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 6, 7 பிரதிவாதிகள் மீது நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் நான் சொல்வது போல் 6, 7 பிரதிவாதிகள் பிரச்னை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 6, 7 பிரதிவாதிகள் தாவா சொத்து உள்ள கிராமத்தில் வசித்து வருவதால் தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று தெரிந்து 1 முதல் 5 பிரதிவாதிகளிடம் நான் இடையூறு செய்யக்கூடாது என்று மட்டுமே சொன்னார்கள் என்றால் சரியல்ல. எனவே 6, 7 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாபடி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.